# திராவிடப் போராளிகள்

27 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## தந்தையின் பெயரை தமிழாக்கிய நீலாம்பிகை!



ஓவியம் : ரவிபேலட்

‘**தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை**’ என்று போற்றப்படும் மறைமலை அடிகளின் இயற்பெயர் சுவாமி வேதாசலம். அவரது மூத்தமகள் பெயர் சிந்தாமணி. அவருக்குப் பின் பிறந்த ஐந்து பிள்ளைகள் குறுகிய காலம் வாழ்ந்து இறந்துவிடவே, அதன் பின் பிறந்த நீலாம்பிகை, இளமையில் பெற்றோரின் பேரன்பில் திளைத்தார். மழலைமொழி மாறும் முன்பே தந்தையிடம் பாடம் கேட்டு பதிமூன்று வயதுக்குள் தண்டியலங்காரம், யாப்பருங்கலங்காரிகை, நீதிநூற்கொத்து, சிலப்பதிகாரம், புறநானூறு, பெரியபுராணம், வில்லிபாரதம் முதலிய நூல்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

விரிவுரையாற்றும் கலையும் பேச்சாற்றலும் அவருக்கு இயல்பிலேயே அமைந்திருந்தன. சென்னை, இராயப்பேட்டை பாலசுப்ரமணிய பக்த ஜன சபையின் ஆண்டுவிழாவில் பதிமூன்று வயதுச் சிறுமியாக அவர் நிகழ்த்திய உரை கேட்பவர்களை மலைக்கச் செய்தது.

### தனித்தமிழ்க் கொள்கையின் தாய்!

அந்த வயதிலேயே நீலாம்பிகையிடம் தமிழ்ச்சொற்களையும் வடமொழிச் சொற்களையும் பிரித்தறியும் வேர்ச் சொல்லாய்வும் ஆராய்ச்சி அறிவும் சுடர்விட்டது.

1916–ஆம் ஆண்டு மறைமலை அடிகள் நீலாம்பிகையோடு தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது ‘**பெற்ற தாய்தனை மகமறந்தாலும்**’ என்ற வள்ளலார் இராமலிங்க அடிகளின் திருவருட்பா பாடலைப் பாடினார். அப்பாடலின் அடுத்த அடியில், ‘**உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்**’ என்ற சொல் வந்தபோது ‘**தேகம்**’ என்ற வடசொல்லுக்கு மாற்றாக ‘**யாக்கை**’ என்ற தமிழ்ச்சொல் இருந்திருந்தால், எவ்வளவு இனிமையாக இருக்கும் என்று கூற, அதைக்கேட்ட நீலாம்பிகை, அதனை வழிமொழிந்து “நாம் இனி அயல்மொழிச் சொற்களை நீக்கி, தனித்தமிழிலேயே பேசுதல் வேண்டும். அதற்கான முயற்சிகளை இடையறாது செய்தல் வேண்டும்” என்று கூறி அதனை வாழ்வியல் இயக்கமாக்கினார்.

நீலாம்பிகையின் அறிவார்ந்த வேண்டுகோளை ஏற்ற தந்தையார் சுவாமி வேதாசலம் என்ற தன் பெயரை மறைமலை அடிகள் என மாற்றிக் கொண்டார். (வேதம்- மறை, சலம் மலை, சுவாமி - அடிகள்) மேலும், தான் நடத்திவந்த ‘**ஞான சாகரம்**’ என்ற மாத இதழின் பெயரை ‘**அறிவுக்கடல்**’ என்றும், தான் நடத்திவந்த ‘**சமரச சன்மார்க்க நிலையம்**’ என்ற அமைப்புக்கு ‘**பொது நிலைக் கழகம்**’ என்றும் தனித்தமிழ்ப் பெயர் சூட்டினார். தந்தைக்கும் மகளுக்கும் தனித்தமிழ்ச் சொல் தேடலே உரையாடலானது.

தந்தையின் பெயர் மாற்றத்தைத் தொடர்ந்து தன் தங்கை, தம்பியரின் பெயர்களையும் தனித்தமிழில் மாற்றியமைத்தார் நீலாம்பிகை. 1925–ஆம் ஆண்டு பிறமொழி கலப்பில்லாத ‘**தனித்தமிழ்க் கட்டுரைகள்**’ என்ற நூலை எழுதியபோது நீலாம்பிகையின் வயது 22.

### அழகிய காதல் கதை!

இலங்கையில் மறைமலை அடிகளைச் சந்தித்த திருவரங்கன் என்ற இளைஞர் மறைமலை அடிகள் உடன் இருந்து தமிழ்ப்பணி ஆற்றுவதற்காக சென்னை வந்தார். அவரது தமிழ்ப்பற்றும் பண்பும் நீலாம்பிகையை ஈர்த்தன. இருவரும் காதல்கொண்டு திருமணத்துக்காக பெற்றோரின் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அந்நிலையில் மறைமலை அடிகளுக்கும் திருவரங்கனாருக்கும் இடையில் ஒரு முரண்பாடு ஏற்பட்டு அது மனக்கசப்பாக மாறிவிட்டது. எனவே நீலாம்பிகையின் காதலை மறைமலை அடிகள் ஏற்கவில்லை. நீலாம்பிகையின் விருப்பம் போல் திருமணம் நடக்கலாம். ஆனால், தான் திருமணத்தில் பங்கேற்கப் போவதில்லை என்றார்.

நீலாம்பிகையோ தந்தை வராமல் தன் திருமணம் நடக்காது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டு, சென்னையில் உள்ள லேடி வெலிங்டன் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்தார். அதே ஆண்டில் (1920) திருவரங்கனார் திருநெல்வேலியில் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தை நிறுவினார். பத்தாண்டு காலம் ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருந்தனர். இப்படியாக பத்தாண்டுகள் சென்றபின் மகளின் மன உறுதியால் மறைமலை அடிகளின் மனம் கனிந்தது. 1927–ஆம் ஆண்டு செப்டம்பர் 2–ஆம் நாள் சென்னை, மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் திருமணம் நடைபெற்றது.

வடமொழி ஆதிக்கத்தை எதிர்த்த நீலாம்பிகை அம்மையாரின் திருமணம், பார்ப்பனர் மற்றும் அவர்கள் கூறும் வடமொழி மந்திரம் மற்றும் சடங்குகளை நீக்கி நடைபெற்றது. எனினும், அத்திருமணத்தில் சில பார்ப்பனர்கள் வடமொழி மந்திரத்தை ஓதியது பற்றி மிகப் பெரும் வாதங்கள் நடந்துள்ளன. மேலும் சில மாதங்கள் இந்த விவாதம் நடைபெற்றது.

### ஆங்கிலம் வேண்டுமென்று அழுத்திய உரை

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் நீலாம்பிகை அம்மையாரின் சைவ சமயப் பின்னணியையும் பக்தியையும் தாண்டி அவரை ஈர்த்தது. எனவே, பெண்கள் மறுமணம் செய்வது பற்றி ஆதரித்து எழுதினார். உடன் கட்டை ஏறுவது ஏற்புடைய தல்ல என்றும், கல்வியும் எளிமையும் பெண்களுக்குத் தேவை எனவும் எடுத்துரைத்தார். ஆயினும், அவரது பெண் விடுதலைக் கொள்கைகள் முழுமையான மாற்றத்தை எடுத்துச் சொல்லவில்லை.

**பத்தாண்டு காலம் ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருந்தனர். இப்படியாக பத்தாண்டுகள் சென்றபின் மகளின் மன உறுதியால் மறைமலை அடிகளின் மனம் கனிந்தது.**

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் அவருக்கிருந்த பயிற்சி, உலக இலக்கிய ஆய்வுகளுக்கு அவரை இட்டுச் சென்றது. அதே நேரத்தில் தாய்மொழியாகிய தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை தனது இந்தி எதிர்ப்பு மாநாட்டுத் தலைமை உரையில் “ஆங்கில நாட்டில் தாய்மொழிக்காகப் பாடுபட்டவர்கள் பெண்கள்தான். அந்நாட்டு ஏழைகளுக்காகவும் சிறையில் இருப்பவர்களுக்காகவும், அவர்களின் பிள்ளைகளுக்காகவும் சிற்றூர்களிலும், கல்விக்கண்ணை அந்நாட்டில் திறந்தவர்கள் எலிசபெத் ஃபிறை, மிஸ் மார்ட்டினோ, எலிசபெத் பாரெட் பிரௌனிங் என்னும் பெருமாட்டிகளே ஆவர்...” என்று வரலாற்றில் மறைக்கப்படும் பெண்களின் பங்கை உரத்துப் பேசியவர் நீலாம்பிகை அம்மையார்.

“நம் பிள்ளைகள் ஆங்கிலம்தான் நன்றாகப் படிக்க வேண்டும், தமிழ் நன்றாகப் படிக்காமல் போனாலும் கவலையில்லை என்று நம் தாய்மார்கள் சொல்கிறார்கள்” என்று இன்றும் நடைமுறையில் உள்ள சிக்கல்களை அன்றே வெளிப்படையாகப் பேசியவர் நீலாம்பிகை அம்மையார். அதே நேரத்தில் “ஆங்கிலக் கல்வி கட்டாயம் வேண்டும். அதன் மூலம் உலக மொழிகளில் உள்ள நூல்களைக் கற்கலாம். அது அரசியல் மொழியாகவும் இருக்கின்றது. எனவே அதனைப் பொதுமொழியாக வைக்கலாம்” என்று அழுத்தமாக உரைத்தது அவரது தலைமை உரை.

இத்தனைச் சிறப்புகளைக் கொண்ட நீலாம்பிகை அம்மையார் 5.11.1945 அன்று உடல்நலக்குறைவால் காலமானார். அதற்கு ஓராண்டுக்கு முன்பு 28.04.1944 அன்று அவரது காதல் கணவர் திருவரங்கனார் மறைந்தார். மொழிப்போர் வரலாறு பேசப்படும்போதெல்லாம் 1938–ஆம் ஆண்டில் வரலாறு படைத்த தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடும், அதன் தலைமை உரையாற்றிய திருவரங்க நீலாம்பிகை அம்மையாரும் நம் நினைவில் நிற்பார்கள்.

(வருவார்கள்...)

---

### மீண்டும் ஐ.ஏ.எஸ் எழுத ஆசை!



“மதுரையில் கலைஞர் நினைவு நூலகத்தின் நான்காவது தளத்தில் போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் மாணாக்கர்கள், இளைஞர்களுக்குப் பயன்படும் வகையில், ஏறத்தாழ 30,000 நூல்களுடன் கூடிய ஒரு தனிப்பகுதி அமைந்துள்ளது. இந்த தகவல் அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தேன்” என ஒடிசாவிலிருந்து அம்மாநிலத்தின் தலைமை ஆலோசகரும், தொல்லியல் ஆய்வாளருமான ஆர்.பாலகிருஷ்ணன் பதிவிட்டுள்ளார்.

அவரது ஃபேஸ்புக் பதிவில், 1983–ஆம் ஆண்டில், மதுரையில் குடிமைப் பணி தேர்வுக்குப் படிப்பதற்காக நூல்கள், நூலகங்களைத் தேடியலைந்த தனது அனுபவத்தைப் பதிவிட்டுள்ள அவர், கலைஞர் நூலகத்தைப் பார்த்து, தனக்கு மீண்டும் ஆட்சிப் பணிக்குப் படிக்க ஆசை வந்துள்ளதாக உற்சாகம் ததும்பக் கூறியுள்ளார். அவரது பதிவில் “மதுரையில் கலைஞர் நினைவு நூலகத்தில் ஒரே தளத்தில் போட்டித் தேர்வர்களுக்குப் பயன்படக்கூடிய முப்பதாயிரம் நூல்கள். அடேங்கப்பா... அப்படியென்றால், நூல்கள் வாங்க சென்னைக்குப் போக வேண்டாமா? மாத இதழ்களுக்காக கடை அருகே காத்திருக்க வேண்டாமா? ஆசையாக இருக்கிறது!

இந்த நான்காவது தளத்தில் அமர்ந்து படித்து, இன்னும் ஒரு முறை குடிமைப்பணி தேர்வு எழுதி, மீண்டும் ஒரு முறை ‘முதல் முயற்சி’யில் வென்று காட்ட! அப்படி என்ன வயசாகி விட்டது எனக்கு 64 + தானே!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

### ஃப்ளாஷ்பேக்





காளியப்பன்

#### இயக்கமும் படிப்பும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இளைஞர் அணி அமைப்பு உருவாக்கப்பட்ட சமயம். ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில், முதன்முதலாக சோலையார் பேட்டையில் இளைஞர் அணி அமைப்பை உருவாக்கி, தளபதியார் அவர்களைச் சிறப்புரையாற்ற அழைப்பு விடுத்திருந்தோம். அதை ஏற்று, அவர் வருகை தந்து சிறப்புரையாற்றினார். அப்போது ‘இயக்கப் பணி செய்யும் அதேவேளையில் படிப்பையும் கவனத்தில் கொள்ளவேண்டும்’ என்று இளைஞர் அணித் தோழர்களுக்கு அறிவுறுத்தினார். இளைஞர் அணி அமைப்பாளராக அவரை வரவேற்று சால்வை அணிவித்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**–முரசொலி காளியப்பன்,
தலைவர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை,
சோலையார்பேட்டை,
திருப்பத்தூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்பவேண்டிய முகவரி:
அன்பகம், 614, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை,
சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473


### கருவூலம்

#### கை ரிக்ஷா ஒழிப்பு!

**1973–ஆம் ஆண்டு, கலைஞரின் 50–ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் ‘கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம்’ செயல்படுத்தப்பட்டது. அந்த நாட்களிலிருந்த உள்ளூர்ப் போக்குவரத்து சாதனங்கள் குதிரை வண்டிகளும், மாட்டு வண்டிகளும் மட்டுமே. அவற்றுக்கு நிகராக கை ரிக்ஷாக்களும் இருந்தன. ‘மனிதனை மனிதன் இழுப்பதா? மாடா? மனிதனா?’ என்கிற கேள்வி மனிதநேயம் கொண்ட அத்தனை பேர் மனதிலும் ஓடியது. கலைஞர் அந்தத் துயரத்தை ஒழிக்கத் திட்டமிட்டார். அவரது 50–வது பிறந்த நாளில் கை ரிக்ஷா ஓட்டியவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கினார். மாடுகளாகவும் குதிரைகளாகவும் ரிக்ஷா இழுத்தவர்கள், மனிதர்களாக மாறி, சைக்கிள் ரிக்ஷா ஓட்டத் தொடங்கினர்.**

---

### திராவிடத்தால் வாழ்கிறோம் 183




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131